உ

கணபதி துணை

நீதிநெறிவிளக்கம்.

தருமபுரவாதீனத்தைச்சார்ந்த

காசிமடம்

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து நல்லூ.

சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பவ௵ தைமீ.

உ

கணபதி துணை.

நீதிநெறிவிளக்கம்.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக - ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. ௧

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு - முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. ௨

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கு
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காம
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய
பிற்பயக்கும் பீழை பெரிது. ௩

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் - சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. ௪

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு - முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. ௫

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு - நவையஞ்சி
யீத்துணணூர் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (சு)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (எ)

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பக
லேதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். (அ)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல் - கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (கூ)

மனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா - மனைத்தக்காண்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். (க0)

இன்சொல்லன் றாழ்நடையனாயினுமொன்றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாயதிறவா - வென்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (கக)

இவறன்மை கண்டு முடையானை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப - பெரிதுந்தா
முற்பக னோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (௧௨)

கற்றார்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக் கழகுசெய் வார். (௧௩)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க - சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (௧௪)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. (௧௫)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு - மில்லார்
குறையிரந்து தம்முன்னா நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். (௧௬)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. (௧௭)

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின். (கஅ)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த னீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற் - றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம். (கசு)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (உo)

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாமில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். (உக)

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பா
தமக்குப் பயன்வே றுடையார் - திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். (உஉ)

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவா யங்காத்தன் - மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். (உங)

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா - தாக்கணங்கு
மாணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில். (உ௪)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
வேதிலனை நோவ தெவன். (உ௫)

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் - மாத்தகைய
வந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு. (உ௬)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு - மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை. (உ௭)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும் - தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. (உ௮)

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொள லு மாண்பே - குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும பல. (உ௯)

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொரு
ளின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவ
னாவன கூறி னெயிறலைப்பா னாறலைக்கும்
வேடலன் வேந்து மலன். (க௦)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
யுடுப்ப வுடுத்துண்ப வுண்ணா - விடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். (கக)

ஒற்றிற் றெரியா சிறைப்புறத தோர்துமெனப்
பொற்றோ டிணையாத் தெரிதந்துங் - குற்றத்
மறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று. (கஉ)

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு. (கங)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குணர்வோ டுணர்ச்சிமற் றில்லாகு - மணடெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச செறிந்து. (கச)

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுத - றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (கரு)

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் றாழ்வார்க் - கணிய
திளையாண் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங் கொளல். (௩௬)

கண்ணோக் கருமபா நகைமுகமே நாண்மலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (௩எ)

வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா - வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. (௩அ)

மாகஞ் சிறுகக் குவித்து சிதிக்குவை
யீகையி னெக்கழுத்த மிக்குடைய - மாகொல்
பகைமுகத்த வெளவேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு. (௩௯)

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடைய
தானுடம் பென்று புகழுடம போம்புதற்கே
தானுடம் பட்டார்க ளாம். (௪௦)

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்த
மின்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின். (௪௧)

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும்-கொலைநாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூடி னும். (சஉ)

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
களியார் சுமைபோ டதற்கு. (சங)

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப - விகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை. (சச)

செவிசுடச் சென்றாங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா - கவுண்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு. (சரு)

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க - வொவ்வொருகா
லெண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னான். (சசு)

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார் - வெகுளின்மற்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு. (சஎ)

மன்னர் புறங்கடை காத்து வறிதேயா
மென்னலங் காண்டுமென் றெள்ளற்க - பன்னெடுநாட்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்
தேத்தவையின் மிக்குச் செயும். [து

உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப - விறுமுயிர்க்கு
மாயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில. (௪௯)

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
யுயலாகா வாழ்ந்திறந்த வென்னோர் - மயலாயு
மூற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்று ரெறிகான் முகத்து. (௫0)

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே - யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. (௫௧)

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து - மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (௫௨)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (௫௩)

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார் - நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (டுச)

புறப்பகை கோடியின் மிகுறினு மஞ்சா
ரகப்பகை யொன்றஞ்சிக் காப்ப - வினைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை. (டுரு)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டுங் - கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (டுசு)

நட்பிடைக் குப்பம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமா
நாளுலந்த தன்றே நடுவ ணடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து. (டுஎ)

மனத்த கறுப்பெனி னல்ல செயினு
மனைத்தெவையுந் தீயவே யாகு - மெனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். (டுஅ)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே - யனல்கொளுந்தும் [பச்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (டுகூ)

பொய்குறளை வன்சொற் பயனிலவென் றிந்நான்கு
மெய்தாமை சொல்லின் வழுக்காது - மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா றெனல். (க0)

நல்லா றொழுகின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (கக)

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவுந் - தவம்விற்றாங்
கூணோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை. (கஉ)

இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியா
ருடைமைகொண் டேமாப்பார் செல்வ - மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும். (கங)

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா - முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
வொருழுமன் மாயா திரா. (கச)

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
யொத்த கடப்பாட்டிற் றாளூன்றி - யெய்த்து
மறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும பொருள். (கரு)

பொதுமகளே போல்ப தலையாயார் செல்வங்
குலமகளே யேனையோர் செல்வம் - கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். (௬௬)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னலகுரவே போலு நனிநல்ல - கொன்னே
யருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். (௬௭)

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்த
லோகோ கொடிது கொடிதம்மா - நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றூவா விவரென்செய் வார். (௬௮)

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிக
னல்வினை கோறலின் வேறல்ல - வல்லைத்தம்
மாக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். (௬௯)

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழா - ரறனல்ல
வெண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினு
மொண்மையிற் றீர்ந்தொழுக லார். (௭௦)

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னுஞ் - செயிர்த்துரைப்பி
னெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோ
லெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. (௭௧)

அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப - வல்லாற்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார். (எஉ)

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொளலோன் - பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போற்
கைவிதிர்த் தஞ்சப் படும்.

தெய்வ முளதென்பார் தீய செயபபுகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வ
மிலதென்பாக் கில்லைத்த மினபுதல்வாக் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (எச)

தீய செயற் செய்வா ராக்கம பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல - தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். (எரு)

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயுஞ்
செநநெறிச் செல்வாரிற் கீழலலா - முன்னைத்த
மூழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில. (எசு)

பிறன்வரை நின்றாள கடைத்தலைச் சேற
லறனன்றே யாயினு மாக - சிறுவரையு
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுணணடுங்கு நோய். (எஎ)

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே - பெரிதுந்த
மின்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்த னலம். (எஅ)

கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார் - பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப் பட்டார். (எகூ)

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர் - நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னுந்
தீய விலங்கிற் சிலர். (அ0)

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு - மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. (அக)

ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம். (அஉ)

கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லர் - மற்றுத்தங்
கேளவற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார். (அங)

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார் - பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவங்
கற்பின் மகளிர் பிறப்பு. (௮௪)

பெண்மை வியவார் பெயருமெடுத் தோதார்
கண்ணொடு நெஞ்சுறை நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார். (௮௫)

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லா
மயிற்சுவையி னுகுவவென் றெண்ணி - யயிற்சுவையும்
பித்துணுக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போன்
மொத்துணு மொய்ம்பி னவர். (௮௬)

அன்பொ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார் - புன்புலாற்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றுமவேய்ந்த
புக்கில் குடிபுகுது வார். (௮௭)

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப - முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில். (௮௮)

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉ - மவ்வினை
காத்த விலரே லெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர். (௮௯)

பரபரப்பி ேனாடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப - வொருவாற்று
னல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
வெவ்வாற்று னுய்வா ரிவர். (கூ0)

இளைய முதுதவ மாற்றுது நோற்றென்
றுளைவின்று கண்பாடு மூழே - விளிவின்று
வாழ்நாள் வரம்புெ ம காண்பரேற் காண்பாருந்
தாழாமெ நோற்ப வம். (கூக)

நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
யல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கு - மெல்லி
வியனெறிச் செல்வானை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல். (கூஉ)

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே - கஞ்சுக
மப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
புலமுங் காவா திது. (கூங)

ஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த
வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
யங்கங் குலைவ தறிவு. (கூச)

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும் - கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுறைக்குஞ் சேயார் முகத்து. (கூரு)

மெலியார் விழினு மொருவாற்றா னுய்ப
வலியார்மற் றென்றானு முய்யார் - நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினு
முய்யுமா றுய்யா பிற. (௯௬)

இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லாற் - பசுவேட்டுத்
தீயோம்பி னான்வழக்கங் காண்பானை யொப்பவே
றின் பவர். (௯௭)

எவனாவ னாயதிறந்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி - யெவரெவர்க்கு
முப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையா
னெப்பாலு நிற்ப தென. (௯௮)

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யு
ணர்ச்சி, கைவருதல் கண்ணுப் புலங்காப்பார் - மெய்யு
ணர்ந்தார், காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. (௯௯)

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போன் - முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்ப
மிறந்தவெலாந் துன்பமலா தில். (௧௦௦)

கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். (௧௦௧)

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். (க0உ)

முற்றுற்று.